# THE MORNING STAR.

Vol. 62. Jaffna, Thursday 17th of July, 1902. No 15

Righteousness Exalteth a Nation but Sin is a Reproach to any People.


*RECEIPT FOR THE MORNING STAR.*
1902

| | | |
|---|---|---|
| Nellore | Revs. H. Horsley and S. Morse and Messrs. J. C. Abraham, T. J. Sathianathan, J. Thevasagayam D. Nathanael, C. Arulprakasam, M. Muttiah. Mrs. Vathavanam N. G. B. School. | 10 00 |
| Horana | Mr. S. Tambipilly | 2 00 |
| Agraputna | Mr. M. Tambipilly | 2 00 |
| Straits Settlements | Mr. S. Kanapathipilly | 2 25 |


THE CEYLON STEAMSHIP COMPANY LIMITED.



Lady Havelock and Lady Gordon are appointed to sail from Kangesanturai for Colombo on the undermentioned dates:—

Via Paumben.

| | | | |
|---|---|---|---|
| Lady Havelock | 8th | July | 1902. |
| " " | 22nd | " | " |
| " " | 5th | August | " |

Via Point Pedro.

| | | | |
|---|---|---|---|
| Lady Gordon | 14th | July | " |
| " " | 28th | " | " |

W. MATHER & SON, Agents

Alexander Bros. & Co

THE LARGEST GENERAL STORES IN THE NORTH.

Deparments:—Oilmanstores of every Description.
Medicines, Soaps, Perfumery, Guns, Bicycle Accessories, Lamps, Watches, Clocks, Platedware, Cutlery, Steel trunks.

TAILORING DEPARTMENT.

We have some first class men under us.
Trial Solicited. Work finished in shortest time possible.
☞Our Omum Water. All houses should have a bottle

Alexander Brothers & Co.
Importers of British & Foreign Goods.
THE JUNCTION.
JAFFNA.

THE JAFFNA COMMERCIAL CORPORATION LIMITED.

Remittances can be made
Between,
Jaffna, Batticaloa, and Colombo
Both by wire and Draft
To and From
**Colombo and Jaffna.**

| | |
|---|---|
| Commission on wire transfer above Rs.500.00 | 1° |
| on wire transfer under " 500.00 | 2° |
| on draft on sums above " 500.00 | $\frac{1}{2}$° |
| ondraft on sums under " 500.00 | 1° |

**From Jaffna to Batticaloa.**

| | |
|---|---|
| Commission on wire transfer | $\frac{1}{2}$° |
| Commission on Draft | 1° |

**From Batticaloa to Jaffna.**

| | |
|---|---|
| Commission on wire transfer | 1° |
| Commission on Draft | $\frac{1}{2}$° |

To and from
**Colombo & Batticaloa**

| | |
|---|---|
| Commission on wire transfer | $1\frac{1}{2}$° |
| Commission on Draft and cashing Colombo cheques $\frac{3}{4}$°/₀ on sums above Rs. 250.00 | |
| 1o/o on sums under Rs. 250.00 | |

**From Jaffna to Madras Calcutta & Rangoon**

Commission on Draft } Madras & Calcutta $\frac{3}{4}$°
{ Rangoon 1 o/o

| | |
|---|---|
| Colombo Bankers. | The National Bank of India Ltd. |
| Madras | The National Bank of India Ltd. |
| Calcutta | The National Bank of India Ltd. |
| Rangoon | The National Bank of India Ltd. |
| Batticaloa | The Jaffna Commercial Corporation Ltd |
| Jaffna | The Jaffna Commercial Corporation Ltd |

WILLIAM MATHER.
Managing Director.

BRODIE & Co. Colombo.

Importers of *Oilmanstores Wines and Spirits, Estate Tools and Requisites* at lowest rates. Price list on application

*"Red Star" Portland Cement*

As supplied to the Madras Municipality
Guaranteed Best Quality. Rs 10 per barrel

BRODIE & Co. Colomb.

ANKETELL'S ILLUSTRATED PRONOUNCING ENGLISH-TAMIL DICTIONARY.

Price *Twelve Annas*. Postage 1½ as Ten percent discount on ten copies and over. Apply to S. P. C. K. Press. Vepery, Madras, and Booksellers in Ceylon.

Portraits of
H. M. KING EDWARD VII

| | | |
|---|---|---|
| Half tone— | Carte Size | 6 cts each |
| | Cabinet | 12 " " |
| Photographs— | Carte Size | 50 cts each |
| | Cabinet | 75 " " |

S. K. LAWTON & Co.
Manipay Jaffna.


In Ever Loving Memory
Of The Late
MR. SAMUEL TAPPEN MUTTIAH
*Broker*, AIETKEN SPENCE & Co.
Died 23rd June 1894.

"Father in thy gracious keeping
Leave we now thy servant sleeping."

(Inserted by his sorrowing widow and children.)
Jaffna 23rd June 1902.

ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction | No. 1277.

In the Matter of the Estate of the late Kathirkamer Tampiayah of Chandilippai. Deceased.

Mailvakanam Perampalam of Chandilippai. Petitioner.

Valliammaipillai widow of Kathirkamer Tampiayah of Chandilippai. Respondent.

This matter of the Petition of Mailvakanam Perampalam of Chandilippai praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Kathirkamer Tampiayah of Chandilippai coming on for disposal before W. R. B. Sanders Esquire, Distrtct Judge, on the 20th day of June 1902 in the presence of Mr. Tambiah S. Cooke. Proctor, on the part of the Petitioner and affidavit of the Petitioner dated the 16th day of June 1902 having been read, it is declared that the Petitioner is the father-in-law and next of kin of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said intestate issued to him unless the Respondent or any other person shall on or before the 31st day of July 1902 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 20th day of June 1902 — W. R. B. Sanders, District Judge.

## Local and General.

**Weather.** For the past week there has been a strong wind accompanied by clouds threatening rain, tho almost none has fallen. The dust is so thick that it is unpleasant being about in the streets. A few showers would be very acceptable.

**Jaffna Christians in the Straits.** We quote from the "Malaysia Message" of June :—"The difficulty of establishing self-support among our native churches is greatly increased by the fact that our members are constantly receiving letters from missionaries or pastors in China or India asking them to contribute to the support of the church there. .........It is not only those who come here as Christians who are asked to give to the support of churches in far away lands, but those who have been converted here are asked also. Often the missionary is astonished to find that one of his church members has sent a sum of money, in some cases a number of dollars, to some point in India or China while he has not contributed a cent to the upkeep of the church here. We think this ought not to be, and if these lines should meet the eye of any one who has offended in this respect, we hope, he will look at our side of the matter and not offend again."

Some who have gone from Jaffna occasionally send a small donation but excuse themselves from giving more on the plea that they are paying their contributions in the Straits. We hope that it is not true that they are not paying either here or there. The fact is that Jaffna Christians living in the Straits, or any where outside of Jaffna, should have their names transferred from the church in Jaffna where they are enrolled to the church they are actually attending As it is, many are now reported in two church rolls, one here and the other elsewhere.

**Obituary** We regret to hear of the untimely death of Mr. S. M. Kulasagarampilly at Lindula. Also of the death of Mr. N. Appiah at Agrapatna. Both of these gentlemen were members of Navaly Church. *Com.*

**Coal for Jaffna.** The B. I. steamer "Sidhana" is now at Kangesanturai discharging 1100 tons of Bengal coal for the Jaffna railway. Messrs Wm. Mather and Son have taken the landing contract. *Com.*

**Railway.** Mr. Oliver paid a visit of inspection to Jaffna last week. Mr. Kindersley is soon to remove his headquarters to Anuradhapura. The opening of the line as far as Pallai has been postponed, we hear, to the first of August.

Carts still compete with the railway, and it is rumoured that the running of trains through the peninsula will be discontinued for a time, if the receipts do not improve very materially.

**Railway Materials for Jaffna.** The S.S. "Clavodan" a big English steamer of over 6000 tons was to leave London on the 25th June. She may be expected at Kangesanturai within 2 weeks. She is bringing among other materials 60,000 sleepers and 1000 barrels cement for the Jaffna railway. She will be 15 days discharing the cargo. Messrs Wm. Mather & Son of our town have also secured the landing contract of the English Steamers for this year. *Com.*

**Personal.** Mr. Thomas Paul of Navaly who lately returned from South Africa is now at Trincomalie on a short visit.

Rev. E. M. Weaver is now at Mannar visiting the field of the Wesleyan Mission.

Mr. Samuel. Muttutamby of the teaching staff of the Manipay English School has joined the Navly Standard English School. He is an old student of the Jaffna College. *Com.*

**Poultry Disease.** We have received in these days several complaints about a sort of disease attacking poultry and numerous fowls are reported to have died. Specially in the town and its suburbs. *Com.*

**Land Tax.** It is reported that the government is contemplating to impose a land tax in the island. The survey of the island that is now being made is a preliminary step for its introduction. Information is gathered from the heads of departments throughout the island by the commission appointed to report upon the introduction of the said tax. *Com.*

**Coronation.** The concert and illumination intended for the 26th of June and indefinitely postponed came off on the 10th and 5th of this month. The concert was held in the King's House, Fort, and illuminations on the esplanade in front of the police station. *Com.*

**Supreme Court.** It is reported that the second sessions for this year at Jaffna will not be held. The committals being only two, the government may have thought it proper to transfer the cases for the February sittings next year. *Com.*

**Appointments.** We learn that Mr. C. M Chinniah of the General Stores, Jaffna will be appointed as the Kachcherry Shroff in place of V. Ampalavanar Mudl. retired; that Mr. P. Francis of the Customs will be transferred to the General Stores; and Mr. A. Catheravaloo also of the Customs will succeed Mr. Francis as second clerk. Mr. Kanniah of Navaly will be appointed as Shroff and Landing Waiter at Customs in place of Mr. Catheravaloo. *Com*

**Marriage.** Mr. S. Thuraisamy, Maniagar at Valigamo East was married on the 30th June to Miss Ponnammah his own cousin.

**A New Notary.** Mr. Tilliampalam, who was for a long time a registered clerk under Mr. T. C. Changarapillai, Proctor, has received his warrant to practice as a Notary in the Division of Valigamo East and to have his office at Puttoor. *Com.*

**Special Service.** The usual monthly English service was held in St. Peter's Church, Pettah, on the evening of Sunday the 13th Inst. Rev. Lockwood of Pt, Pedro preached an impressive sermon on "Separation" of man from sin. *Com.*

**Y. M. C. A. Jaffna Town.** An interesting lecture on "Volcanic eruptions" was given by Prof. W. R. Cooke, Central College, on the 15th Inst. The Rev. R.C. Hastings presided on the occasion. *Com.*

**Students Mission** The annual meeting of the "Students mission" will be held in the Manepay church on Friday the 25th inst. commencing at 6-30 o'clock. A cordial invitation is extended to all interested in the cause of mission to be present on this occasion. Rev. I. Paul and family are expecting to leave for Tondi, India, by the first of August to labor in connection with this mission.

### THE NAVALY STANDARD ENGLISH SCHOOL.

This Institution situated at the Western side of the Navaly Church having Mr. Wm. Mather, Agent of the Ceylon Steamship Co. and Director of the Commercial Corporation, as Manager of the School, and Mr. D. P. Adams, late Shroff of the Madras Bank as Treasurer, and with these gentlemen Messrs. S. T. Arnold, Proctor (D. C.) J. H Bebier late Shroff of the Mercantile Bank and Rev. R. P. Bryant, Pastor of the Navaly Church as members forming the Directorate, is conducted by Mr. William Lyman the Headmaster assisted by Messrs. S. H. Muttutamby and Tambipilly Jeremiah both bearing Government certificates. Another efficient teacher who has passed either F.A. or L.T. is wanted. There are now about 70 students in all the six standards. Mr. Lyman having served nearly 43 years as teacher in the Batticotta English High School retired from that service preferring to be Headmaster of this Institution close to his residence in Manipay. This gentleman is one who is held in high esteem by all his brother officers, students, friends and neighbours and was presented with a watch and chain as a token of remembrance at a farewell meeting held at the eve of his departure from Batticotta.

There will also be taken a Commercial Class to train them to be useful for the Commercial Departments in Ceylon and abroad.

A NATIVE.

**Progress of Christianity in India.**

Many will be interested to learn that one of the daughters of Mr. P. Adhinarayana Iyah, B. A., B. L., District Munsiff of Shiyali, is to be baptised at the College Church, to-morrow morning. When Mr. and Mrs. Adhinarayana Iyah with their children were received into the church early this year, this lady was not baptised along with them; but she will now have the pleasure of joining her family again.

*Christian Patriot 17th May* 1902

# உ த ய ❀ த ா ர ை க .

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும், பாவமோ எந்தச் சனங்களுக்கும் இகழ்ச்சி.

கூ௨ம் புத்தகம்.] யாழ்ப்பாணம், ௧௯௦௨ம் ஹு ஆடி மீ ௧௭ உ வியாழக்கிழமை. [சங்கியை. கடு



## இலங்கைப் புகைக்கப்பற் கொம்பனியாரின



புகைக்கப்பல்கள் பின்வரும் தேதிகளில் கொழும்புக்குப்போகவிருக்கின்றன.

| | |
|---|---|
| கோடன் காங்கேசன்றுறையிலிருந்து பருத்தித்துறைவழியாக | 1902. ஆடி மீ 28உ |
| அவலக் காங்கேசன்றுறையிலிருந்து பாம்பன்வழியாக | " " 22 |
| அவலக் காங்கேசன்றுறையிலிருந்து பாம்பன்வழியாக | " ஆவணி 5 |

W M MATHER & SON. Agents

### குத்தகை விளம்பரம்.

இத்தாலறிவிப்பது: எனது முதுசொமும் கொள்விலையும் ஆட்சியுமான காணி வலிகாமம்வடக்கு உடுவிற்கோவிற்பற்று உடுவில்றை கண்ணுங்கோப்பையும், ஓத்தையாப்புலமும், தக்கறையும், கோவிச்சன்மூலமும், சட்டனும், பூவடையும், இந்தனையும், பள்ளியாப்புலமும், கத்தலானையும், சத்தனும், ஒட்டையாப்புலமும், செட்டியாப்புலமும், இன்னும் மறுபிறிவுகளுமடங்கிய "(Cleavland)" "கிளீவ்லண்டு" தோட்டம் பரப்புநிலஇலாச்சம் 1040 ஆயிரத்து நாற்பது. இந்தத் தோட்டத்தின் பழையகுத்தகை இந்த ஆடிமாதக் கடைசியோடு முடிவாகிறபடியால் இதனடுத்த ஐந்துவருடத்தவணைக்குத் திரும்பவும் குத்தகையாக எற்க விரும்புபவர்கள் இங்கிலிஷஆடிமாதம் 25 ந் திகதிக்குள் என்னிடம்வந்துகேட்கலாம். இந்தத் தோட்டத்தின் சிற்சில பாகங்களில் விளையும் புகையிலை குடிபுகையிலைக்கு மிகத் திறமானவையென்று சொல்லுவார்கள்.

மற்றும் விபரங்களை முகாமுகமாகக் கண்டு அறிந்துகொள்ளலாம். குத்தகையேற்பவர்கள் ரூபா 2500 க்குக் குறையாத பெறுமதியுள்ள ஆதனம் ஈடுகொடுக்கவேண்டியது.

வே. முதலியார் முத்துவேற்பிள்ளை.
12—7—1902. கந்தரோடை.


## உ த ய த ா ர ை க .

### ௧௯௦௨ம் ஹு ஆடி மீ ௧௭ உ.

### சட்டநிருபணசபைத் திருத்தம்.
### Reform of the Legislative Council.

இராயரின் மகுடாபிஷேகத்தோடு இலங்கைச் சட்டநிருபணசபையிலுஞ் சில மாற்றங்கள் நடைபெறுவது தகுதியென்பது இந்நாட்களிலே பலர்பேசும் விஷயமாயிருக்கின்றது. சாதிகளுக்கொருவராய்ச் சங்கப் பிரதிநிதிகளை நியமிக்கும் வழக்கத்தை நிறுத்தி, மாகாணத்துக்கொருவரிருவராய்க் குடிசனவீதப்படி பிரதிநிதிகள் நியமிக்கப்படல்வேண்டுமெனச் சிலர்கூற, வேறுசிலர் தேசாதிபதியல்ல சனங்களே பிரதிநிதிகளைத் தெரிதல்வேண்டுமெனக் கூறுகின்றனர். இலங்கையே முதலாங் கிறவுன்கலனியெனப் பெயர்பெற்றிருந்தாலும் மந்திராலோசனைச்சங்கவிஷயத்திலிது மற்றைக் கலனிகளுக்கு மிகப் பிந்திநிற்கின்றதெனலாம்.

இங்கிலந்திலிருக்குங் கலனிகளின் இராசமாலிகிதரால் நியமிக்கப்படுபவராகிய தேசாதிபதியவர்கள், ஐந்து அங்கத்தவர்களடங்கிய சட்டஸ்தாபனசபையாரினுதவியோடு இலங்கையின் ஆளுகையை நடத்துகின்றனர். தேசாதிபதிக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தரான கொலோனியல் சக்கிடேத்தார், சேனபதி, அற்றேணிஜெனறல், சோதனுகர்த்தர், தனுதிபதியென்னும் ஐவருமே சட்டஸ்தாபனசபை அங்கத்தவராவர். சட்டங்களையுண்டாக்குவதாகிய சட்டநிருபண சபையில் மேற்கூறிய சட்டஸ்தாபனசபை அங்கத்தவர்களோடு மேல்மாகாணஏசண்டர், நடுமாகாணஏசண்டர், பகிரங்கவேலைப்பகுதித்தலைவர், ரேகுத்தலைவர் என்னும் நால்வருஞ்சேர்ந்த ஒன்பது உத்தியோகஸ்தர்களும், ஐரோப்பியபிரதிநிதி, தோட்டத்துரைமார் பிரதிநிதி, அங்கிலோவர்த்தகர் பிரதிநிதி, கீழ்நாட்டுச் சிங்களர்பிரதிநிதி, மேல்நாட்டுச் சிங்களர் பிரதிநிதி, பேகர்பிரதிநிதி, மகமதீயர்பிரதிநிதி, தமிழர்பிரதிநிதி யென்னும் எண்மருமாய்ப் பதினேழு அங்கத்தவர்களுளர். அதாவது பதினேழுபேரடங்கிய சட்டநிருபணசபையில் எட்டுப் பேர்மாத்திரம் பிரதிநிதிகளாயிருக்கின்றனர் அவர்களும் தேசாதிபதியாலேயே தெரியப்படுகின்றனர். சட்டஸ்தாபனசபையிற் பிரதிநிதிகளொருவருமில்லை. இலங்கைக்கு எவ்வளவோ குறைந்ததாகிய சைப்பிறஸ்தீவின் சட்டநிருபணசபையில் பன்னிரண்டுபேர் பிரதிநிதிகளாயிருக்கின்றனர். மோறிஷஸ் தீவின் சட்டஸ்தாபனசபையில் ஐந்து உத்தியோகஸ்தரும், இரண்டுபிரதிநிதிகளும் அங்கத்தவர்களாயிருக்கின்றனர். சட்டநிருபணசபையில் எட்டு உத்தியோகஸ்தரும் தேசாதிபதியால் நியமிக்கப்படும் ஒன்பது பிரதிநிதிகளும், சனங்களாற் தெரிவுசெய்யப்படும் பத்துப் பிரதிநிதிகளுமாய் 27 அங்கத்தவர்களுளர். அப்படியே கொங்கோங், ஜமயிக்கா வென்னுஞ் சிறுக் கலனிகளிலும் சட்டஸ்தாபனசபை அங்கத்தவர்களில் இருவர் சட்டநிருபணசபைப் பிரதிநிதிகளாற் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளாயிருக்கின்றனர். பிரதிநிதிகள் இலங்கையிற்போலத் தேசாதிபதியால் நியமிக்கப்படுவதில்லை. அவர்களைச் சனங்களே தாமாய்த் தெரிவுசெய்தேற்படுத்துவர். ஆகவே, குடிசனம், விஸ்தாரமாதியவற்றில் மிகச் சிறியவைகளாகிய அந்தக் கலனிகள் இதுவிஷயத்தில் இலங்கையை எவ்வளவோ முந்திவிட்டனவென்பதும், தேசஆளுகைவிஷயத்திற் சுதேசிகளும் அதிக ஆலோசனைக்காரராயிருக்கின்றனரென்பதும் தெளிவு.

இப்போதிருக்கும் சட்டநிருபணசபை இற்றைக்கு எழுபதுவருடங்களின்முன்னே சேர் றப்பேட் கோட்டன் தேசாதிபதியின்காலத்திலே இந்தவகையாய் ஒழுங்குபண்ணப்பட்டது. இந்த எழுபது வருடத்துக்கிடையில் இலங்கையிற் சனங்களின்நிலையில் எவ்வளவோ திருத்தமும் தேர்ச்சியுமுண்டாயிருக்கின்றமையால் சட்டநிருபண, சட்டஸ்தாபன சபைகளிலுந் திருத்தங்களையுண்டாக்கி, பிரதிநிதிகளின தொகையைக் கூட்டி அவர்களில் மிகுதியானோரைத் தெரிவுசெய்யுஞ் சலாக்கியத்தைச் சனங்களுக்கே கொடுப்பது அரசாட்சியாரின் கடமையாகின்றது. எட்டுவேட் இராசசக்கிரவர்த்தியவர்கள் இலங்கை மந்திராலோசனைச்சபைகளிற் தற்காலத் தேற்றத்துக்குத்தக்க திருத்தங்களையுண்டாக்குவதற்கு அவரின் மகுடாபிஷேக காலமே தகுந்ததருணமாயிருக்கும். இந்தநேரத்தில் அப்படிச்செய்வது, கீழ்ப்படிவும் இராசபக்தியுமுள்ள தமது பிரசைகளுக்கு இராயர்கொடுக்குமோர் பெரியகொடையாகும்.

### இலங்கைக் குடிமதிப்பு விபரம்.
### Census Results.

1901 ம் ஆண்டில் எடுக்கப்பட்ட இலங்கைக் குடிமதிப்புவிபரம் குடிமதிப்புக் கம்மிஷனராய் நியமிக்கப்பட்ட மெஸ். பொ. அருணசலம் அவர்களால் ஒழுங்குப்படுத்தி முடிக்கப்பட்டு, இப்பொழுதே வெளிவருகின்றது. சேனுவீரர், கப்பற்காரர், யுத்தமறியற்காரரை நீக்கி இலங்கையின் குடிசனமொத்தம் 35,65,954. இதில் ஆண்களின் தொகை 18,96212; பெண்களின் தொகை 16,69,742. இலங்கையின் விஸ்தாரம் 25,331 சதுரமைலாகவே, சதுரமைலொன்றுக்குக் குடிசனவீதம் 141 ஆகின்றது. குடிசனம் அதிநெருக்கமாய்ச்சீவிக்கும் மாகாணம் மேல்மாகாணமே. அவ்விடத்தின் குடிசனவீதம் சதுரமைலொன்றுக்கு 643. அதிகம் ஐதாய்க் குடிசனம் வசிக்குமிடமாகிய வடமத்தியமாகாணத்தின் குடிசனவீதம் சதுரமைலொன்றுக்கு 20 மாத்திரமே. 1891 ம் ஆண்டிலெடுக்கப்பட்ட சனத்தொகையோடொப்பிட்டுப்பார்க்கும்போது பத்துவருடத்தில் ஏறக்குறைய நூற்றுக்குப் பத்தொன்பது வீதமாய்க் குடிசனம் அதிகப்பட்டிருக்கிறதாய்த் தெரியவருகின்றது. இது சென்ற பத்துவருடங்களில் இலங்கைத்தேசமானது சுகமும், செழிப்பும், செல்வமும்பொருந்திய நிலையிலிருந்ததென்பதற்கறிகுறியாம். சனங்கள் வசிக்கும் வீடுகளின் தொகை 5.98,076.

குடிசனமொத்தத்தைச் சாதிகளாய்ப் பங்கிட்டுப்பார்க்குமிடத்து,

| | |
|---|---|
| கீழ்நாட்டுச்சிங்களவர் | 14,58,320 |
| மேல்நாட்டுச்சிங்களவர் | 8,72.487 |
| தமிழர் | 9,51,740 |
| சோனகர் | 2.28,034 |
| மலாயர் | 10 133 |
| வேடர் | 3,971 |
| ஐரோப்பியர் | 6,300 |
| பேகர், யூறெஷியர் | 23 482 |
| மறுபேர் | 9 718 |

சமயானுசாரப்படி பிரித்தால்,

| | |
|---|---|
| புத்தசமயிகள் | 21,41,404 |
| இந்துசமயிகள் | 8,26,826 |
| கிறீஸதவர்கள் | 3.49.239 |
| மகமதியர் | 2,46,118 |
| மறுபேர் | 2,367 |

கிறீஸ்தவர்களில் 2.87,414 பேர் ரோமான் கத்தோலிக்கரும், 61825 பேர் புரோட்டெஸ்தாந்தருமாம் 1891 ம் ஆண்டிலிருந்தகத்தோலிக்கர்தொகை 2,46,214; புரொட்டெஸ்தாந்தர்தொகை 55,913.

இலங்கையிலுள்ள முழுக்குடிசனத்தில் 7,73,196 பேர் மாத்திரம் ஏதாவதோர்பாஷையை எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாயிருக்கின்றனர். எஞ்சியவர்களாகிய 27 90,255 பேரும் எழுத வாசிக்க அறியாதவர்கள். இவர்களில் 15,53,018 பேரும் பெண்களேயாம். ஆகவே சனங்களுக்குள்ளே அதிகமாய்ப் பாடசாலைகளை ஸ்தாபித்துக் கல்வி கற்பிக்கவேண்டிய அவசியமிருக்கின்றதென்பதும் விசேஷமாய்ப் பெண்கள் கல்விகற்பிக்கப்படுவதற்கு அதிக இடமிருக்கின்றதென்பதுந் தெளிவாகின்றது.

### இராசசக்கிரவர்த்தியவர்களின் சுகசேமமும் மகுடாபிஷேகமும்.
### The Kings Health and Coronation.

மாட்சிமைதங்கிய இராசசக்கிரவர்த்தியவர்கள் தமக்குற்ற நோயிலிருந்து நாளுக்குநாள் சவுக்கியம்பெற்று வருகிறார். இராணியாரையும் உவேல்ஸஇளவரசரையும் அடிக்கடி கண்டு சம்பாஷிக்கிறார்; நல்ல நித்திரை செய்கிறார்; நல்ல பசியிருக்கின்றது; இரணத்தின்நோக் குறைவு; காயம் படிப்படியாய் ஆறிவருகின்றது. சென்ற செவ்வாய்க்கிழமை கடலிற் சொற்பதூரம் பிரயாணம்பண்ணவும் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. தமது மகுடாபிஷேக விஷயத்திற் சனங்கள் ஏமாந்துபோனார்களேயென்பது அவர்க்கு மனவிதனமாயிருக்கின்றது. சத்திரவைத்தியஞ்செய்வதற்காய்க்கொடுக்கப்பட்ட மருந்தின் மயக்கந்தெளிந்தவுடன் இராயர்முதன்முதற் பேசியவார்த்தைகள் "என்சனங்கள் எனக்கு மன்னிப்பருளல்வேண்டும்" என்பனவாம். தமது மகுடாபிஷேகம் கூடிய சீக்கிரத்தில் நடைபெறல்வேண்டும் என இராயர் விருப்புக்காட்டினமையால் ஆவணிமாதம் 8 ம் 12 ம் திகதிகளுக்கிடையில் ஓர்நாளில் மகுடாபிஷேகம் நடைபெறுமென்றும். பிரித்தானியராச்சியமெங்குமிருந்துசென்ற சேனுவீரர், பிரதிநிதிகளையும், இராசகுடும்பத்தவர்கள் பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் பிறதேச பிரதிநிதிகளையும் வரிசைப்படுத்தி லண்டன்நகரவீதியிற் செல்லவெண்ணியிருந்த இராசபவனி இல்லாதுவிடப்படுமென்றும், பிறராசாங்கங்களுக்கு இரண்டாம்முறை அழைப்புப்பத்திரமனுப்பப்படுவதில்லையென்றும் கடைசியாய் வந்த தந்திகள் கூறுகின்றன. கலனிகளிலிருந்துசென்ற பட்டாளத்தவர்கள் நிற்கும்படி மறிக்கப்பட்டிருக்கின்றனர். இந்தியாவிலிருந்துசென்ற சுதேசராசாக்கள் திரும்பிவருவதைப்பற்றிய தீர்மானமின்றி அங்குமிங்குஞ் சுற்றிப்பார்க்கின்றனர். பூமியின் நாலுதிசைகளிலுமிருந்துசென்ற இளவரசர்கள், பட்டவர்த்தனர், பிரதிநிதிகளாதியோரை உவேல்ஸ் இளவரசரும், இராயரின்தம்பியாராகிய கோன்னோற் பட்டவர்த்தனரும், இராணியாரும் மிகக்கண்ணியமாய் உபசரித்தனர். கலனிகளிலிருந்து சென்ற மந்திரிமார், பிரதிஸ்தர்களெல்லோரையுஞ்சேர்த்து சென்ற 11 ந் திகதி ஓர் பெரிய விருந்தளிக்கப்பட்டது. இதற்குச் சபாநாயகராய் வீற்றிருக்க நியமிக்கப்பட்ட மெஸ். சேம்பளேன் சுகவீனராயிருந்ததால், லோட் ஒன்சிலோ சபாநாயகராயிருந்தனர். இனிப் பிரியமானோர் மகுடாபிஷேக கொண்டாட்டத்துக்கு நிற்க மற்றோர் தத்தம் இருப்பிடங்களுக்குச் செல்வர்போலும். அதி ஆடம்பர வேடிக்கைகளுடன் மகுடாபிஷேக கொண்டாட்டம் நடத்தச் சனங்களெண்ணியிருக்க, வேடிக்கைகளும் பவனிகளுமின்றி அது நடைபெறல்வேண்டுமென்பது தேவசித்தமாயிற்று.

### யாழ்ப்பாணம்.

காலநிலை—Weather.—சிலநாட்களாய் வானம் முழுவதும் மந்தாரமாயிருக்க, காற்றுப் புயல்போல்மோதியடிக்கின்றது.

புகைவீதி.—The Railway.— பழை ஸ்தானத்தின் கட்டிடவேலைகள் முற்றுப்பெறாமையால் சாவகச்சேரிக்கும் பழைக்குமிடையிற் புகைவண்டிகளின்னும் ஓடத்துவங்கவில்லை. ஆவணிக் கடைசியிலேயே பழைவரைக்கும் புகைவண்டிப் போக்குவரவு நடைபெறும். அதன்பின் புகைவீதி இஞ்சினீர் மெஸ். கின்டேஷ்லி அனுராசபுரஞ்சென்று அவ்விடத்திற் தமது ஆபீசை ஸ்தாபித்து வடக்கும் தெற்கும் நடைபெறும் புகைவீதிவேலையைக் கண்காணிப்பர். புகைவீதிச்சாமான்களேற்றிக்கொண்டு இங்கிலந்திலிருந்துவரும் "கிளாஸ்வொடான்" என்னும் புகைக்கப்பல் இரணடோர்கிழமைகளால் காங்கேசன்றுறைவந்துசேரும். சாமான்களிறக்கும் ஒப்பந்தம் மெஸ். உவில்லியம் மேதர் எடுத்திருக்கின்றனர்.

புகைவண்டிகளிற் சாமான்களேற்றியிறக்குஞ்செலவை அரசாட்சியார் மிகக்குறைத்திருந்தாலும், இன்னும் மாட்டுவண்டிக்காரர் எதிர்நின்று சாமான்களைத் தாமேற்றிப் பறிக்கின்றனர். மாவிட்டபுரத் திருவிழாக்காலத்தில் புகைவண்டிகளைக் கோயிலுக்கணித்தாய்நிறுத்திச் சனங்களையேற்றியிறக்கவும், ஒருநாளுக் கிருமுறைமாத்திரமல்லப் பலமுறை புகைவண்டிகளையோடச்செய்யவும் ஒழுங்குகள் நடைபெற்றிருக்கின்றன.

வாணவேடிக்கை.—Fireworks.—சென்ற 5 ந் திகதி சனிக்கிழமை இரவு, இராசசக்கிரவர்த்தியவர்கள் சுகம்பெற்றுவருவதின்சந்தோஷக்கொண்டாட்டம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. முற்றவெளித்தெருக்களினிருமருங்கும் பந்த வெளிச்சங்களும் கண்ணுடி வெளிச்சங்களுமேற்றப்பட்டன. மகுடாபிஷேக தினத்துக்கென்று ஆயத்தஞ்செய்யப்பட்டிருந்த வாணங்களில் ஒருபகுதி விற்கப்பட்டுப்போக, மற்றப்பகுதி, அந்நேரங்கொளுத்திவிடப்பட்டன. அனேகசனங்கள் கூடிநின்று தீபாலங்காரத்தோடு வாணவேடிக்கைகளையுங் கண்டுகளித்து இராயரை வாழ்த்திச் சென்றார்கள்.

பாட்டுக்கூட்டம்.—Concert.— மகுடாபிஷேகதினங்களுக்கென ஆயத்தஞ்செய்யப்பட்டிருந்த பாட்டுக்கூட்டம் சென்ற 10 ந் திகதி வியாழக்கிழமையிரவு யாழ்ப்பாணக்கோட்டைக்குள்ளிருக்கும் இராயர்மாளிகையில் வைக்கப்பட்டது. ஐரோப்பியர், பேகர், சுதேசிகளெனப் பலர் அம்மாளிகையிற் சேர்ந்து, சேண்டத்திரிச் கல்லூரி, மத்தியகல்லூரி மாணவர்களும், கனம். வற்றவீல்ட் மெஸ், மெக்கன், மெஸ. விறெயின், மெஸ். குக், மெஸ். கின்டேஷ்லி, மிஸ்சிஸ். கிறெற்சர், மிஸ. குட்சைல்ட், மிஸ். கொக், மிஸ். தம்பு என்பவர்களும், பியனு, புட்டில் ஆதிய வாத்தியக் கருவிகளோடு பாடியபாட்டுகளைக்கேட்டுமகிழ்ந்துசென்றனர்.

தோண்டிமிஷன்.—Tondi Mission.— யாழ்ப்பாணப் பிறதேச மிஷன்சங்கம், ஸ்திரீகள் மிஷன்சங்கங்களின் பொறுப்பில், தொண்டிக்குச் சென்று இரண்டுவருடங்களுக்குச் சுவிசேஷவேலைநடத்துவதற்கு, சுவிசேஷசங்கத்தின்கீழ், புங்குடுதீவிற் தேவபணிவிடைநடத்தினவராகிய கனம். ஐசக் போல் போதகர் உடன்பட்டு, சமுசாரசகிதராய்த் தொண்டிக்குச் செல்வதற்காயத்தப்படுகின்றனர். பிறதேச மிஷன் சங்கத்தின் வருடாந்தக்கூட்டம் இந்தமாதம் 25 ந் திகதி மானிப்பாயில் நடைபெறும். அங்கத்தவர்களும் மற்றோரும் இக்கூட்டத்துக்கு சிநேகிதரையுங் கூட்டிக்கொண்டு வரும்படி அழைக்கப்படுகின்றனர் சபைகள் எல்லாவற்றிலுந் தொண்டிமிஷனைப்பற்றி விசேஷ பிரசங்கங்கள் செயயும்படி போதகர்மார் கேட்கப்பட்டிருக்கின்றனர். தெற்கு எழாலைச்சபைப் பிரசங்கியாராயிருந்த மெஸ். டான்வோத், கனம். போல் போதகரினிடத்துக்குப் புங்குடுதீவு செல்கின்றனர்.

பிரயாணிகளுக்கு.—To Travelors.—இரண்டோர் வாரங்களின்முன் காங்கேசன்றுறையிலே கப்பலால் வந்திறங்கிய ஒருவரின் சாமான்பெட்டியை வண்டிவிலேற்றுகிறேனென ஒருவன் தூக்கிக்கொண்டோடிவிட்டான். அதற்குள் தங்கப்பவுண்களும் கடதாசிநாணயங்களும் விலைபெற்ற உடுப்புகளுமிருந்தன. விதானை மெஸ். சுந்தரம்பிள்ளையின் முயற்சியால், யாழ்ப்பாணத்திலிருந்துசென்ற பொலிசுமார் சமுசயப்பட்டோர்சிலரின் வீடுகளைச் சோதித்து, பணதையும் உடுப்புகளையுமெடுத்ததோடு மூன்றுபேரையும் பிடித்திருக்கின்றனர். கப்பலில் வந்திறங்கும் பிரயாணிகள் சாமான்களைப்பற்றி எச்சரிப்பாயிருத்தல்வேண்டும்.

துவக்குச்சட்டம்.—Firearms Ordinance.—துவக்குகள் வைத்திருப்பது பாவிப்பதைப்பற்றிய சட்டம் யாழ்ப்பாணத்திலும் மற்றுமிடங்களிலும் அனுசரிப்புக்குவருகின்றமையால் அதைப்பற்றிய விபரத்தை யாவரும் அறிந்துகொள்வதவசியம ஒற்றைக்குழல் துவக்குக்கு 1 ரூபா முத்திரையும், பலகுழற் துவக்குகளுக்கு 2 ரூபா முத்திரையும ஒவ்வொருவருடத்துவக்கத்திலுங் கொடுத்து எசண்டரிடத்தில் லைசென்ஸ் முடித்துக்கொள்ளவேண்டியது. துவக்குவியாபாரஞ்செய்பவர் வருடவீதம் 50 ரூபாகொடுத்து லைசென்ஸ்பெறல்வேண்டும். லைசென்ஸ்பெறாததுவக்கை வைத்திருந்தால் அல்லது பாவித்தால் 50 ரூபாவரையிற்பணத்தண்டம் அல்லது மூன்றுமாதவரையில் மறியல் விதிக்கப்படும்

ஆட்கள்.—Personal.—வடமாகாண எசண்டராகிய மெஸ். லூயிஸ் சுற்றோட்டத்தில் நெடுந்தீவு சென்றிருக்கின்றனர். துவிபாஷிதர் மெஸ். சிற். கயிலாசபிள்ளை முதலியாருங் கூடப்போயிருக்கின்றனர்.

மன்னாரின் உப எசண்டராகிய மெஸ். டென்னும் சுகவீனத்தினிமித்தம் யாழ்ப்பாணம் வந்திருக்கின்றனர்.

முல்லைத்தீவு டிஸ்திறிக்கின் வைத்தியராகிய டக்தர் யோன்பிள்ளை காய்ச்சல்நோயாற் பீடிக்கப்பட்டமையால் லீவில் யாழ்ப்பாணம் வந்திருக்கின்றனர்.

பிணுங்குக்கு அக்கரையிலுள்ள உவெல்லெஸ்லிமாகாணத்தில் செவேயராயிருப்பவரும் காரைதீவு வாசருமாகிய மெஸ். எ. கிளவ் மூன்றுமாசலீவில் யாழ்ப்பாணம் வந்திருக்கின்றனர்.

மானிப்பாய் அங்கிளவித்தியாசாலையில் உபாத்தியாயராயிருந்த மெஸ். முத்துத்தம்பி நவாலி அங்கிளவித்தியாசாலைக்குச் செல்ல, அச்சுவேலி அங்கிளவித்தியாசாலையின் தலைமை ஆசிரியராயிருந்த மெஸ். மதியாபரணம் மானிப்பாய வித்தியாசாலையில் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். சுண்டிக்குளிப்பாடசாலையி விருந்தவராகிய மெஸ். வி. உவாறென் அச்சுவேலிப்பாடசாலை உபாத்தியாயராயினர்.

யாழ்ப்பாணம் கச்சேரிச் சிறப்பாய், உரும்பராய் வாசரும், ஸ்தோர்கீப்பருமாகிய மெஸ். சின்னையா அவர்கள் நியமிக்கப்படுவாரெனப் பேச்சுநடக்கின்றது.

விவாகம்.—Matrimonial.—புத்தூர மணியகாரனும் மெஸ. கதிரைவேற்பிள்ளைநீதவான் அவர்களுக்கு மகன்முறையினருமாகிய மெஸ். எஸ். துரைச்சாமி, உடுப்பிட்டியிலே தமது மைத்துனியாகிய மிஸ். பொன்னம்மாவைச் சென்ற மாதம் 30 ந்திகதி விவாகஞ் செய்தனர். விவாகம் பிரசித்தமின்றி நடைபெற்றதாயினும், சுற்றத்தவர்களோடு சினேகிதர் பலர் சமுகங்கொடுத்து மணமக்கட்காசிகூறிச் சென்றனர்.

சாராயக்குத்தகை.—Arrack Rents—அடுத்துவரும் இரண்டுவருடங்களுக்கும் யாழ்ப்பாணத்தின் சாராயக்குத்தகை, பழய குத்தகைகாரனாகிய மெஸ். டொன்யோசெவ் அப்புகாமியால் 2,11,440ரூபாய்க்குக்கொள்ளப்பட்டிருக்கின்றது வவனியாக் குத்தகையை மெஸ். எஸ். ஆசைப்பிள்ளை16,180ரூபாவுக்குவாங்கியிருக்கிறார்

